IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

OS No. 11/2024

**P.W.**1

| | |
|---|---|
| Name | : அன்னபூசணம் |
| Father/Husband Name | : கமலகண்ணன் |
| Place | : |
| Calling | : |
| Age | : 45 |
| Date | : 11-03-2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026.

சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

2. நாகூரான் என்னுடைய மாமனார். நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய மாமனாரின் பூர்வீக சொத்தை மோசடியாக கிரையம் செய்ததற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் 12 ஆம் வகுப்பு படித்துள்ளேன். தாவா சொத்து நஞ்சை நிலம். தாவா சொத்துக்கள் எங்களுக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். 1945 ஆண்டு முளவன் என்பவரிடமிருந்து கன்னியப்பன் என்பவர் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கன்னியப்பன் தான் அந்த சொத்தை பயிர் வைத்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து 7 ½ சென்ட் நிலம். அந்த சொத்திற்கு நான் வரி செலுத்தி உள்ளேன்

என்றால் செலுத்திய உள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. கன்னியப்பன் எனக்கு என்ன உறவு என்றால் என்னுடைய பெரிய மாமனார். நான் குறிப்பிடும் ஆவண எண். 146/2019 என்ற ஆவணம் பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் நான் வில்லங்கச் சான்று செய்து பார்த்த போது தான் தெரியவந்தது. தேதி நினைவில்லை. நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வில்லங்கச் சான்றும் தற்போது நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள வில்லங்கச் சான்றும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. தாவா சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு தான் சொந்தமானது என்றாலும் அதை அவர் முறையாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் பயிர் வைத்துள்ளேன் என்றால் பயிர் செய்தேன். எப்போது பயிர் செய்தேன் என்றால் 15 ஆண்டுகளுக்கு முன்பாக பயிர் வைத்திருந்தேன்.

4. நான் பயிர் வைத்ததாக வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் 1 ஆம் பிரதிவாதியின் கி ரையதாரரான 2 ஆம் பிரதிவாதிதான் தாவா சொத்தில் பயிர் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு 2003 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. எனக்கு திருமணம் நடைபெறுவதற்கு முன்பாகவே 2 ஆம் பிரதிவாதியின் அப்பா கன்னியப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அந்த விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாமல் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் புல எண். 462. வழக்குரையில் என்ன புல எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த எண் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்பதற்கான எவ்வித

உரிமை மூலம் மற்றும் உடமை மூல ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 1ஆம் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனவே இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்பதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

5. நான் அரசு அதிகாரிகளை இவ்வழக்கில் சேர்ப்பதற்கு முன்பாக அவர்களுக்கு முன் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் அனுப்பினேன். நான் குறிப்பிட்டுள்ள மோசடி ஆவணத்தில் அரசு அதிகாரிகளான 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பினர்களா உள்ளார்களா என்றால் இல்லை. அரசு தரப்பிற்கு எதிராக நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்குரை பத்தி 8ல் 3 முதல் 5 பிரதிவாதிகளை வழக்கிற்காக அவர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் நான் சாட்சியம் அளித்தது போன்று அவர்களுக்கு முன் அறிவிப்பு ஏதும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு மூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள காரணங்கள் அனைத்தும் தவறானவை என்றால் சரியல்ல. இந்த வழக்கு அரசு அதிகாரிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் அவர்களைப் பொறுத்து இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை**

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.